<u>தமிழ்நாடு அரசு</u>

<u>சுருக்கம்</u>

சுற்றுச்சூழல் – பகுதி–2 திட்டப்பணிகள் – சூழல் மன்றங்கள் மூலம் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் – 2008–09 ஆம் ஆண்டில் பகுதி –2 திட்டத்தின் கீழ் ரூ.15.50 இலட்சம் ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

சுற்றுச்சூழல் மற்றும் வனத் (சு.2) துறை

அரசாணை (டி) எண்.126 நாள் 28.05.2008

படிக்க

இயக்குநர், சுற்றுச்சூழல் துறை, சென்னை–15 அவர்களின் கடித எண்.பி2/3544/07, நாள் 2.1.2008

=====

<u>ஆணை</u> :

இயக்குநர், சுற்றுச்சூழல் அவர்கள் பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக, மாநில அரசின் நிதியுதவிடன் அனைத்து மாவட்டங்களிலும் சுற்றுச்சூழல் மன்றங்களை உருவாக்கி தேர்ந்தெடுக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மூலமாக 1200 சூழல் மன்றங்கள் அனைத்து மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன என தெரிவித்துள்ளார். அரசாணை எண்.151, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, நாள் 21.9.2001ல் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இச்செலவினத்திற்காக ரூ.0.50 இலட்சம் ஒப்புதலளிக்கப்பட்டு 2001ம் ஆண்டு முதல் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் சுற்றுச்சூழல் மன்றங்கள் 40 பள்ளிகளில் உள்ளன. அனைத்து மாவட்டங்களிலும் சூழல் மன்றங்களின் மூலம் சுற்றுச்சூழல் விழிப்புணர்வினை ஏற்படுத்த பகுதி–2 திட்டத்தின் கீழ் 2008–2009 ஆம் ஆண்டில் செலவினை மேற்கொள்ள ரூ.15.50 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கக் கோரி சுற்றுச்சூழல் இயக்குநர் அரசிற்குக் கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. சுற்றுச்சூழல் துறை இயக்குநரின் கருத்துருவினை அரசு பரிசீலனை செய்து, அதனை ஏற்று, சூழல் மன்றங்களின் மூலம் சுற்றுச்சூழல் விழிப்புணர்வினை ஏற்படுத்த, மாவட்டம் ஒவ்வொன்றிற்கும் ரூ.50,000/– என்ற அடிப்படையில் 31 மாவட்டங்களிலும் 2008–2009 ஆம் ஆண்டில் பகுதி 2 திட்டத்தின் கீழ் செலவினம் மேற்கொள்ள ரூ.15.50 இலட்சம் (தொடர் செலவினம்) (ரூபாய் பதினைந்து இலட்சத்து ஐம்பதினாயிரம் மட்டும் ) ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது. இத்தொகை மாவட்ட கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் மூலமாக பகிர்ந்தளிக்கப்படும்.

3. பத்தி 2–ல் குறிப்பிட்டுள்ள செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும் :–

"3435. உயிரின வாழ்க்கைக் சூழலும் சுற்றுச்சூழலும் 03. சுற்றுச்சூழல் ஆராய்ச்சி, உயிரின வாழ்க்கைச் சூழலை மீண்டும் உருவாக்குதல் – 001 – நெறிப்படுத்துதலும் நிருவாகமும் பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்–II மாநிலத் திட்டம் – JA. சுற்றுச்சூழல் துறை 09. உதவி மானியங்கள்–03–குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள் (த.தொ.கு.3435–03–001–JA-0934)"

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.24632/கா/ப/(ம)மீ/08, நாள் 22.4.2008–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா. ராஜகோபால்,
அரசுச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
இயக்குநர்,
சுற்றுச்சூழல் துறை, சென்னை–15.
மாநில கணக்காயர், சென்னை–18.
சம்பள கணக்கு அலுவலர்,சென்னை–9/35.
<u>நகல்</u>
நிதி (வரவு செலவு II/கா.ப(ம) மீன் துறை,
சென்னை–9.
சிறப்பு முயற்சிகள்,திட்டம் மற்றும் வளர்ச்சி துறை,சென்னை–9.
சுற்றுச்சூழல் (ம) வனத் (வ.7) துறை,சென்னை–9.
உதிரி/இருப்புக்கோப்பு

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்